*மலைப்பிரசங்கம் 08*

## *சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்*

***மத்தேயு 5:3-10, ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. 4. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். 5. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். 6. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். 7. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். 8. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். 9. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். 10. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.***

### *மலைப்பிரசங்கத்தின் அமைப்பு*

*இதற்கு நாம் பதிலளிக்கவேண்டுமானால் மலைப்பிரசங்கத்தின் அமைப்பை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.*

*மொத்தம் எட்டு போதனைகளை மலைப்பிரசங்கம் உள்ளடக்கியுள்ளது.*

*1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*2. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*3. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*4. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*7. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*8. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*இந்த முதல் நான்கு போதனைகளும் உடைக்கப்பட்ட, துக்கிக்கும், நீதியின் மேல் பசிதாகம் கொண்ட மென்மையான நபர்களைக் குறித்துப் போதிக்கிறது.*

*கடைசி நான்கு போதனைகளும் இரக்கமுள்ள, தங்கள் நீதியின் நிமித்தம் துன்பப்படுகிற மெய்யான சமாதானத்தை அறிவிக்கிறவர்களைக் குறித்து போதிக்கிறது.*

*அவர்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவைகள் வழிந்தோடுகிறது.*

*மலைப்பிரசங்க போதனைகள் ஒன்றன்பின் ஒன்றாய், புது சிருஷ்டியாய் மாற்றப்பட்டவர்களுக்கு நித்தியத்தின் ஆசீர்வாதம் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறது.*

*இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.*

*இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.*

*சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.*

*நாம் இரக்கத்தை பெறவில்லையென்றால், நாம் நியாயத்தீர்ப்பிற்கு பாத்திரவான்களாக்கப்படுவோம்.*

*நாம் தேவனைப் பார்க்கவில்லையென்றால், நாம் பரலோகத்தில் இல்லை.*

*நாம் தேவனுடைய புத்திரர் என்னப்படவில்லையென்றால், நாம் குடும்பத்தின் அங்கத்தினர் இல்லை.*

*இவைகளெல்லாம் நாம் பெற்றுக்கொள்ளப்போகிற கடைசி இரட்சிப்பின் வெளிப்பாடுகள். அது இரக்கமுள்ளவர்களுக்கும், இருதயத்தில் சுத்தமுள்ளவர்களுக்கும், சமாதானம் பண்ணுகிறவர்களுக்கு மட்டுமே வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.*

*சமாதானம் என்பது வேதாகமம் முழுவதிலும் மிகவும் முக்கியமான ஒன்று. வேதாகமம் சமாதானத்தில் தொடங்கி, சமாதானத்திலேயே முடிவடைகிறது.*

*தேவன் மனிதனையும் மனுஷியையும் சிருஷ்டித்து அவர்களை தோட்டத்தில் வைத்தார். அது சமாதானத் தோட்டம்.*

*அதற்கு பின்பு மனிதன் பாவம் செய்கிறான். அவனுடைய சமாதானம் பாதிக்கப்படுகிறது. தேவனுடனான சமாதானம் தடைபட்டது. மனிதனுக்கும் சகமனிதனுக்கும் இடையிலான சமாதானமும் பாதிக்கப்பட்டது.*

*அதற்கு பின்பு, இயேசு சிலுவையின் மூலம் நம்முடைய இருதயத்திற்கு சமாதானத்தைக் கொண்டுவந்தார்.*

*இயேசு கிறிஸ்து மீண்டும் வந்து அவருடைய சமாதானத்தின் இராஜ்யத்தை மீண்டும் ஸ்தாபிப்பார். அவருடைய புதிய வானத்திலும் புதிய பூமியிலும் நித்திய சமாதானத்தை நாம் அனுபவிப்போம்.*

*மீட்பு என்பது சமாதானத்தின் கதை. சமாதானம் தொலைந்தது, சமாதானம் மீண்டும் இருதயத்தில் தோன்றியது, சமாதானம் பூமிக்கு மீண்டும் கிடைத்தது, கடைசியாய் சமாதானம் நித்தியத்திற்கு வாக்குப்பண்ணப்பட்டது.*

*சமாதானத்தைக் குறித்து நானூறு வேதப்பகுதிகள் வேதாகமத்தில் இடம்பெற்றுள்ளது.*

*தற்போது இந்த பூமியில் சமாதானம் இல்லாத சூழ்நிலை நிலவுவதற்கான முக்கிய காரணத்தை ஒரே வரியில் சொல்லலாம்: மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் யுத்தம்.*

*ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்ததிலிருந்து அதே பிரச்சனை நிலவுகிறது. வீழ்ச்சியிலிருந்து சமாதானம் தடைபட்டது. அதிலிருந்து மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலான யுத்தம் துவங்கிவிட்டது.*

*மனிதன் மட்டும் தேவனோடு யுத்தம் செய்யவில்லை. சாத்தானும் அவனோடு சேர்ந்த தள்ளப்பட்ட தூதர்சேனையும் தேவனோடு யுத்தம்செய்கின்றனர். எனவே தூதர்கள் கூட்டம் ஒருபுறமும் மனிதர்கள் ஒருபுறம் என்று இரண்டு கூட்டங்களும் தேவனை எதிர்த்து யுத்தம்செய்கின்றனர்.*

*சமாதானம் பண்ணுவதற்கு தேவன் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்.*

*இந்த பொறுப்பை தேவன் கீழ்க்கண்டவர்களுக்கு கொடுக்கவில்லை,*

*அரசியல்வாதிகள்,*

*இராஜதந்திரிகள்,*

*நடுவர்கள்,*

*ஜனாதிபதிகள்,*

*பிரதமர்கள்,*

*நாடுகள்,*

*ஐக்கிய நாடுகள்,*

*திருச்சபைகள்,*

*கிறிஸ்தவர்களாகிய உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்.*

*நீங்கள் வேதாகமத்தில் பார்ப்பீர்களானால், உலகம் இதுவரைப் பார்த்திராத, வெளியரங்கமான, மேலோட்டமான, தற்காலிகமாய் ஜெயங்கொள்ளுகிற சமாதானம் பண்ணுகிறவன் வருவான். அவனுடைய பெயரை அந்திக்கிறிஸ்து என்று நாம் அறிந்திருக்கிறோம். மற்ற எல்லா சமாதானம் பண்ணுகிறவர்களைப்போல புதிய யுத்தங்களைத் துவக்கக்கூடிய வகையில் செயல்படுவான்.*

*ஆனால் தேவனுடைய சமாதானக்காரணர்கள் முற்றிலும் வேறுபட்டவர்கள். நமக்கு அரசியல் ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், தேசங்களிலும் சமாதானம் இருக்காது.*

*வீட்டில், சமுதாயத்தில், தேசத்தில் நமக்கு அமைதியான சூழல் இல்லை.*

*சமாதானத்தைக் கொண்டு வருவதில் இதுவரை யாருமே ஜெயமெடுக்கவில்லை.*

*இலட்சக்கணக்கான உயிர்களை பலிவாங்கிய இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்பு, 1945இல் ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்பாக, உலக சமாதானத்திற்காக இந்த ஐக்கிய நாடுகள் அமைக்கப்பட்டது.*

*அதிலிருந்து உலகத்தில் ஒருநாள் கூட சமாதானம் நிலவவில்லை. உலகம் முடிவில்லாத போராட்டங்களால் நிறைந்திருக்கிறது.*

*ஐக்கிய நாடுகளின் நோக்கம்:*

***"பின்வரும் தலைமுறைகளை யுத்தத்தின் கோரத்திலிருந்து விடுவிப்பது."***

*ஆனால் 1945லிருந்து உலகத்தில் பல்வேறு யுத்தங்கள் நிகழ்ந்தது.*

*ஆகையால், தேசத்தில், சமுதாயத்தில், வீட்டில் என்று அனைத்துத் தரப்பிலும் சமாதானம் இல்லை.*

*இதற்கு முன்பிருந்த காலத்தில் இல்லாத வகையில் இன்னும் அதிகப்படியான மக்கள் துப்பாக்கியினால் சுடப்பட்டு உயிரிழந்திருக்கின்றனர்.*

*தனிப்பட்ட சுதந்திரம் யாருக்கும் இல்லை. பெரும்பாலான மக்கள் மனரீதியாக, உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*குடும்பத்தில் சமாதானம் இல்லை. பள்ளியில் அமைதியில்லை.*

*நம்மைச் சுற்றிலும் நிலவும் அமைதியில்லாத இந்த சூழ்நிலைக்கான காரணம், நம்முடைய இருதயத்தில் சமாதானம் இல்லாததே. அதின் விளைவாக, உலகம் மனிதனுடைய இருதயத்தையே பிரதிபலிக்கிறது. துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லை. உலகம் துன்மார்க்கமானது. உலகத்தில் இருப்பவர்கள் அனைவருமே துன்மார்க்கர்.*

***எரேமியா 17:9, எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?***

*இருதயம் திருக்குள்ளதாயிருக்கிறதால், அதில் சமாதானம் இருப்பதில்லை. அதினால் அது அனைத்து விதத்திலும் அந்த சமாதானமின்மையை பிரதிபலிக்கின்றது.*

*மனிதன் சிருஷ்டித்த உலகம் என்பது சமாதானமில்லாதது. இது குழப்பங்கள் நிறைந்த உலகம். போராட்டகளால் சூழப்பட்ட உலகம். இது சிதைந்த கனவுகள் நிறைந்த, நம்பிக்கைகள் இழந்த, உடைந்த உறவுகளால் நிரம்பியிருக்கிற உலகம். சமாதானம் பண்ணுகிறவர்களின் தேவை மிகவும் அவசியம்.*

*1. **சமாதானம் என்பதற்கு அர்த்தம் என்ன?***

*யுத்தம் இல்லாத அமைதியான் சூழ்நிலையே சமாதானம் என்று பலர் நம்புகின்றனர். யுத்தமில்லாத நிலைமையை சமாதானம் என்று வரையறுக்கலாம்.*

*ஆனால் அது சமாதானத்திற்கான தேவனுடைய விளக்கமல்ல.*

*ஏதோ இல்லாத நிலைமை என்பது சமாதானத்திற்கான தேவனுடைய விளக்கமல்ல.*

*யுத்தம், போராட்டம், விரோதங்கள் ஆகியவைகள் இல்லாத இடம் என்று கல்லறையை கூட அடையாளப்படுத்தலாம். ஆனால் அதை சமாதானத்திற்கு உதாரணமாய் நாம் காண்பிக்க விரும்புவதில்லை. எல்லோரும் சமாதானமாய் இருப்பதற்கு சிறந்த இடம் என்று கல்லறையை நாம் யாருக்கும் அறிமுகப்படுத்துவதில்லை.*

வேதாகமத்தில் சமாதானம் என்பது ஏதோ ஒன்று இல்லாத நிலைமை அல்ல; மாறாக, ஏதோ ஒன்று இருக்கக்கூடிய நிலைமை.

அது ஆசீர்வாதமான, நன்மையான, நிறைவான ஒரு உணர்வு இருக்கக்கூடிய நிலைமை.

இரண்டு யூதர்கள் சந்தித்துக்கொள்ளும்போது, அவர்கள் "ஷாலோம்" என்று சொல்லுவது வழக்கம். நீங்கள் யுத்தமில்லாமல் இருங்கள் என்று அவர்கள் சொல்லவில்லை; மாறாக, முழுமையான மனநிறைவையும், அமைதியையும், தேவன் கொடுக்கும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள் என்று வாழ்த்துகிறார்கள்.

சமாதானம் என்பது நன்மையையும், நல்ல வாழ்க்கையையும் கொடுக்கும் ஓர் ஆசீர்வாதமான விசை. எனவே அது ஏதோ ஒன்று இல்லாத நிலைமை அல்ல; மாறாக, ஏதோ ஒன்று இருக்கக்கூடிய நிலைமை.

அது யுத்தமில்லாத ஒரு நிலைமை அல்ல; மாறாக, அதிகப்படியான நன்மைகள் இருக்கக்கூடிய நிலைமை.

சமாதானம் பண்ணுதல் என்பது, எதுவுமே இல்லாத ஒரு வெறுமை நிலையை ஏற்படுத்துவதல்ல.

உலகத்தில் ஒரு வகையான அமைதி நிலவுகிறது. அது யுத்தத்தைத் தவிர்ப்பது மட்டுமே. உங்களுடைய வீட்டிலும் அவ்வப்போது அதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அது அமைதியற்ற அமைதி. அப்போது நீங்கள் எதுவும் பேசமாட்டீர்கள், பேசினால் சண்டை வெடிக்கும் என்பது உங்களுக்கு நன்றாய் தெரியும்.

ஆகையால் நீங்கள் உங்கள் வாயை மூடிக்கொண்டு இங்கும் அங்குமாய் நடந்தாலும் மனதுக்குள் திட்டிக்கொண்டிருப்பீர்கள். இது பிரச்சனையை தற்காலிகமாய் தவிர்ப்பதற்கு மட்டுமே. இது ஒருவகையான சமரசம்.

அல்லது குடும்பத்தில் ஏதோ பாவம் இருக்கிறது, அது நிவிர்த்திசெய்யப்பட வேண்டும் என்று நீங்கள் அறிந்தாலும், அதை நீங்கள் சரிசெய்ய விரும்பமாட்டீர்கள். அதற்கு காரணம், அது பெரியதாக வேறு பிரச்சனையாய் வெடித்துவிடக்கூடாது என்பதற்காகவே அமைதி காப்பீர்கள்.

நீங்கள் சத்தியத்தில் நிற்கவில்லை. நீங்கள் பிரச்சனையை தீர்க்கவில்லை. இது மிகவும் சங்கடமான நிலைமை. நீங்கள் பிரச்சனையை தவிர்க்கிறீர்கள். உண்மையான பிரச்சனையை சரிசெய்யாமல், அது பெரிய பிரச்சனையாய் வெடித்துவிடக்கூடாது என்று பயந்து நீங்கள் அதை மறைத்து வைக்கிறீர்கள்.

- மேலோட்டமான அமைதியை அனுபவிக்கும்பொருட்டு தேவன் நம்மை வாயை மூடிக்கொண்டு இருக்கச் சொல்லவில்லை.
- பிரச்சனையை மறைப்பதின் மூலம் நாமோ அல்லது மற்றவர்களோ அமைதியாய் இருப்பதற்கு தேவனால் அனுமதிக்கப்படவில்லை.
- மேலோட்டமான அமைதியை அனுபவிக்க, பாவத்தோடு நாம் சமரசம் செய்துகொள்வதை தேவன் ஒருபோதும் அனுமதிக்கவில்லை.

அதற்கு மாறாக, வேதாகமம் போதிக்கிற சமாதானம் என்பது தப்பிதங்களை மேற்கொள்ளுகிறது. பாவத்தை மேற்கொள்ளச்செய்கிறது. மெய்யான சமாதானத்தை ஏற்படுத்துகிறது.

*பிரச்சனைகள் தீர்ந்த பின்பு ஏற்படுகிற மன சமாதானத்தையே வேதம் போதிக்கிறது. பேசாமல் செய்யும் பனிப்போரினால் ஏற்படுகிற சமாதானம் நல்லதல்ல, பெரிய யுத்தத்திற்கு பின் நிலவும் சமாதானமே மேன்மையான சமாதானம். அதுவே மெய்யான சமாதானம்.*

***யாக்கோபு 3:17, பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.***

*சத்தியத்தின் விலையைக் கொடுத்து சமாதானத்தை வாங்கமுடியாது.*

*பிழையின் விலையைக் கொடுத்து சமாதானத்தை வாங்கமுடியாது.*

*பாவம் மற்றும் நீதியின் விலையைக் கொடுத்தும் சமாதானத்தை வாங்கமுடியாது.*

***எபிரெயர் 12:14, யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.***

*தேவையில்லாத போராட்டங்களை தவிர்க்க விரும்புவோம். எல்லா இடத்திலும் போய் குழப்பத்தை எற்படுத்த விரும்பமாட்டோம். சிலவேளைகளில் தப்பிதங்களை கவனிக்காததுபோல் இருக்கும் தருணங்கள் உண்டு. பலதரப்பட்ட பாவங்களையும் மறைப்பது சிலவேளைகளில் நேர்மையாக நமக்குத் தெரியலாம். இவையெல்லாவற்றிலும் நாம் பிரச்சனையை உருவாக்க விரும்பதில்லை.*

*சிலர் அதில் கைதேர்ந்தவர்கள். அவர்கள் போகுமிடமெ;லாம் பிரச்சனையை உருவாக்கிவிட்டு வருவார்கள். அதை புண்ணியமாய் கருதி, பரிசுத்தவான் என்னும் போர்வையிலேயே அதை நிகழ்த்துவார்கள்.*

*ஆனால் நாம் சத்தியத்தை தியாகம்செய்ய விரும்புவதில்லை. சத்தியத்திற்கு விரோதமான சமாதானத்தையோ, நீதியை சமரசம் செய்து அதினால் ஏற்படும் சமாதானத்தையோ, நம்மடைய ஆவிக்குரிய கடமைகளில் தவறுவதால் ஏற்படும் சமாதானத்தை நாம் விரும்புவதில்லை. அந்த வகையான சமாதானமானது, தேவனை கனவீனப்படுத்தக்கூடியது, கிரியையில்லாதது, மேலோட்டமானது மற்றும் வஞ்சிக்கக்கூடியது.*

***மத்தேயு 10:34-35, பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். 35. எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன்.***

*இயேசு என்ன சொல்லுகிறார்?*

*இயேசு இப்படியாய் சொல்லுகிறார். நீங்கள் ஒரு விசுவாசியாய் அவிசுவாசியின் வீட்டில் இருப்பீர்களானால், “நான் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவுக்கு என்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்டேன்” என்று நீங்கள் சொன்னால், நிச்சயமாய் உங்களுடைய யூத விட்டில் பிரச்சனைகள் உருவாகும். அது உன் வீட்டின் மீது பட்டயத்தை விழச்செய்து, உங்களுடைய எல்லா வழிகளிலும் உங்களை உண்மையாய் வாழச்செய்யும்.*

***மத்தேயு 10:36-37, ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. 37. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல;***

***மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.***

*சொந்த குடும்பத்தை வெறுப்பதே பட்டயம். அவர்கள் மெய்யான சமாதானத்தை அனுபவிப்பதற்குள், குடும்பத்தில் ஒரு பட்டயம் விழுந்திருக்கும்.*

*பிரச்சனைகள் அவசியம்.*

*பாவத்தை வெளிப்படுத்துவது அவசியம்.*

*குடும்பத்தில் பிரிவு ஏற்படக்கூடிய சூழ்நிலையாயினும், பெரிய யுத்தத்திற்கு பின்பாகவே அமைதி நிலவும் என்பதுபோல, சற்றும் தயங்காமல், தண்டனை மற்றும் நியாயத்தீர்ப்பைக் குறித்த கடிந்துகொள்ளுதலையும் இயேசு கிறிஸ்துவினால் உண்டான இரட்சிப்பைக் குறித்ததான செய்தியையும் போதிக்க வேண்டும்.*

*நாம் சத்தியத்தை நிராகரிக்கவில்லை.*

*நாம் உபதேசத்தை நிராகரிக்கவில்லை.*

*நாம் உணர்த்துதலை நிராகரிக்கவில்லை.*

*நாம் கொள்கைகளை நிராகரிக்கவில்லை.*

*மெய்யான சமாதானம் இல்லாத சூழ்நிலையில் நாம் சமாதானத்திற்காய் கதறுவதில்லை.*

*2 தீமோத்தேயு 3:12,* ***அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.***

*உங்களுடைய வீட்டில், பள்ளியில், வேலை ஸ்தலத்தில், சுற்றுப்புறத்தில் என்று உங்களைச் சுற்றியிருக்கும் அனைத்து உறவுகளுக்கும் முன்பாக பயபக்தியுள்ள ஒரு வாழ்க்கை வாழ்வது என்பது கடினமான ஒன்று. ஏனென்றால் அவர்களின் பாவத்தை நீ சொல்லத் தயங்குகிறாய். ஆனால் பிரச்சனைகளை மறைப்பதினால் அல்ல, பிரச்சனைகள் தீர்ந்ததினால் ஏற்படும் சமாதானமே மெய்யான சமாதானம்.*

*பெரும்பாலான மக்கள், சமாதானம் என்பது அனைவரின் ஒப்புதலையும் உடையதாயிருக்கவேண்டும் என்று கருதுகின்றனர். நாம் எல்லோரும் ஒன்றாக இணைந்து நமக்கு எது உகந்ததோ அதைக் குறித்த விவாதிப்போம்.*

*மெய்யான சமாதானம் என்பது சத்தியத்தின் குழந்தை. அந்த மெய்யான சமாதானத்தையே தேவன் அங்கீகரிக்கிறார். மற்ற வகையான சமாதானங்கள் பொய்யானவைகள். ஏனென்றால் அவைகள் எந்த பிரச்சனையையும் தீர்க்காது.*

*இயேசு கிறிஸ்து சிறந்த சமாதானம் பண்ணுகிறவராய் சுற்றித் திரிந்தார். ஏனென்றால், அவர் இந்த உலகத்திற்கு கடந்து வந்து, எந்த வகையான சமாதானத்தை நமக்கு அருளினார்? தேவனுடனான சமாதானம்.*

***சமுதாயத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகிற நபராய் இயேசு இருந்தாரா?***

*சகல இஸ்ரவேலர்களும் அவருக்கு விரோதமாய் குழப்பத்தை ஏற்படுத்தி, அவரை கொலை செய்தார்கள்.*

## *2. எது சமாதானத்தைக் குலைக்கிறது?*

*பாவம்.*

*நன்மையும் நீதியும் உள்ள சமாதானமே சமாதானம். அதற்கு முரணாய் நிற்கிற அநீதியும் பாவமுமே சமாதானத்தின் எதிரிகள்.*

*ஆகவே, மெய்யான சமாதானம் உண்டாகவேண்டுமென்றால், முதலாவது அங்கே இருக்கக்கூடிய பாவம் நிவிர்த்திசெய்யப்படவேண்டும்.*

*நாம் என்ன யோசிக்கிறோம், நாம் என்ன நம்புகிறோம் மற்றும் நாம் எப்படி நடந்துகொள்ளுகிறோம் ஆகியவைகளே பாவமாய் எண்ணப்படுகிறது.*

***யாக்கோபு 3:18, நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.***

*சமாதானம் பண்ணுகிறவர்கள் நீதியின் விதையை விதைக்கிறார்கள். அவர்கள் பாவத்தை சரிசெய்கிறார்கள். ஏனென்றால் பாவம் நிவிர்த்திசெய்யப்பட்டாலொழிய மெய்யான சமாதானத்தை அனுபவிக்க முடியாது. பாவம் நிவிர்த்திசெய்யப்படவேண்டும்.*

## *3. சமாதானத்தின் ஆதாரம் யார்?*

*தேவனே சமாதானக் காரணர்.*

*தேவனே சமாதானத்தின் ஆதாரம்.*

*தேவன் மட்டுமே சமாதானத்தின் ஆதாரம்.*

***நியாயதிபதிகள் 6:24, அங்கே கிதியோன் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யெகோவா ஷாலோம் என்று பேரிட்டான்; அது இந்நாள்வரைக்கும் அபியேஸ்ரியேலின் ஊராகிய ஒப்ராவில் இருக்கிறது.***

***2 கொரிந்தியர் 13:11, கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்.***

***1 கொரிந்தியர் 14:33, தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.***

*ரோமர் 15:33, **சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக. ஆமென்.***

*இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் அவதரித்தபோது, என்ன அறிவிக்கப்பட்டது?*

***லூக்கா 2:14, உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.***

*தேவனே சமாதானத்தின் ஆதாரம். அவர் இயேசு கிறிஸ்து என்னும் மெய்யான சமாதானக் காரணரை இவ்வுலகத்திற்கு அனுப்பி, அவருடைய மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் பாவிகளை தேவனோடு ஒப்புரவாக்கியிருக்கிறார்.*

***எபேசியர் 2:14, எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து,***

***கொலோசெயர் 1:20, அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.***

*நாம் சமாதானக் காரணராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மெய்யான சமாதானத்தை அறியும் வரை தொடரும். ஏனென்றால் இயேசு கிறிஸ்து நம்முடைய பாவத்தை அவருடைய சரீரத்தில் ஏற்றுக்கொண்டதால் அவர் தேவ நீதியை சரிகட்டியிருக்கிறார்.*

***எபேசியர் 6:15, சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்;***

***யோவான் 14:27, சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.***

*நம்மை நாம் தேவனோடு ஒப்புரவாக்கிக்கொள்ளும்போது, நாமும் சமாதானம் பண்ணுகிறவர்களாய் மாறுகிறோம். அங்கிருந்து தான் இது துவங்குகிறது. சமாதானத்தின் சுவிசேஷத்தை நாம் நம்பும்போது, தேவனுடனான நம்முடைய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது, தேவன் நமக்கு அழிவை அனுமதிக்கிறவராகவே எதிரியாகவோ இல்லாமல், ரோமர் 5ன் பிரகாரம் நாம் தேவனோடு சமாதானம் பண்ணப்படுகிறோம். அங்கிருந்தே நாமும் சமாதானம் பண்ணுகிறவர்களாய் மாறுகிறோம்.*

*நாம் மற்றவர்களை தேவனோடு ஒப்புரவாக்கும் ஊழியத்தில் ஈடுபடுவதால் நாமும் சமாதானம் பண்ணுகிறவர்களாய் மாறுகிறோம். அதவே சுவிசேஷ ஊழியம். நாம் சமாதானமாய் வாழ்கிறோம். அந்த சமாதானத்தை பிரதிபலிக்கிறோம்.*

*அந்த சமாதானத்தை பறைசாற்றுகிறவர்களாய் மாறுகிறோம். நாம் பாவிகளை அழைத்து, அவர்களின் பாவத்தை விட்டு மனந்திரும்பி, அவர்களின் நொறுங்கிய இருதயத்திற்கு சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரே சமாதானக் காரணரை சந்திக்கும்படிக்கு அழைப்பு விடுக்கிறோம்.*

## *4. சமாதானக் காரணரின் அடையாளங்கள் என்ன?*

*(அ) சமாதானம் பண்ணுகிறவர்கள் மக்களை தேவனோடு ஒப்புரவாகச் செய்கிறார்கள்.*

***2 கொரிந்தியர் 5:18-21, இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். 19. அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு***

*ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். 20.* ***ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.*** *21.* ***நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.***

*தேவன் பரிசுத்தமானவர். ஆகையால் பாவிகளோடு அவருக்கு தொடர்பு இல்லை. எனவே மனுஷீகம் தன்னுடைய பாவத்தினால் தேவனுடைய கோபாக்கினைக்குப் பாத்திரவான்களாகின்றனர். நம்முடைய பாவங்களுக்கான ஆக்கினைத் தீர்ப்பை கிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்ததினாலே நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்படுகிறோம் என்பதே சுவிசேஷ செய்தி.*

*ரோமர் 5:1,* ***இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.***

*சமாதானம் பண்ணுகிறவர்கள் அந்த செய்தியை அறிவிப்பதற்கு தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிக்கிறவர்கள். அவர்கள் அதை அனுபவித்தவர்கள் என்பதினால், தேவனோடு மற்றவர்களையும் ஒப்புரவாக்க எண்ணி, அதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுவார்கள்.*

***நீங்கள் சுவிசேஷத்தை அறிவிக்கிறீர்களா?***

*இதை சமாதானம் பண்ணுகிறவர்கள் செய்வார்கள்.*

***ஆ) சமாதானம் பண்ணுகிறவர்கள் எல்லோரோடும் ஒப்புரவாய் இருப்பார்கள்.***

*இது முதலில் நம்மிலிருந்தும் மற்றவர்களுடனான நம்முடைய உறவிலிருந்தும் துவங்குகிறது.*

*மத்தேயு 5:23-24,* ***ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைஉண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்,*** *24.* ***அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.***

*யாரிடமாவது நமக்கு விரோதம் இருக்குமானால், நம்முடைய காணிக்கையை அங்கேயே வைத்துவிட்டு, அந்த நபருடன் ஒப்புரவான பின்பே, திரும்ப வந்து அந்த காணிக்கையை செலுத்தவேண்டும்.*

*ரோமர் 12:18,* ***கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.***

*நமக்கு விரோதமாய் பாவம் செய்வதவர்களை நாம் மன்னிக்கிறோம்.*

*நாம் அவர்களை சபிக்காமல், ஆசீர்வதிக்கிறோம்.*

*நாம் யாருக்கு விரோதமாய் பாவம் செய்திருந்தால், நம்மை தாழ்த்தி, அவர்களிடம் மன்னிப்பு கேட்கிறோம்.*

*நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டவர்களாதலால், யாவரோடும் சமாதானமாய் இருக்கிறோம்.*

*நாம் மற்றவர்களோடு ஒப்புரவாவது மட்டுமல்ல, அவர்களை தேவனோடும் ஒப்புரவாக்குகிறோம்.*

***பிலிப்பியர் 4:2-3, கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன். 3. அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது.***

*சபையில் ஏற்படும் பிரிவுகள் பரவத்துவங்குகிறது என்பதை பவுல் அறிந்துகொண்டார். அது தேவன் திருச்சபைக்குக் கொடுத்த ஆசீர்வாதத்தை விலக்கி, பிசாசு உட்புகுவதற்கு வழிவகுக்கிறது.*

*ஆகையால் பவுல் சிறைச்சாலையில் இருந்தபோதிலும், பிலிப்பு பட்டணத்தில் இருந்த இரண்டு ஸ்திரீகளை ஒப்புரவாகுதல் ஊழியம் செய்யும்பொருட்டு அவர்களிடத்திற்கு அனுப்புகிறார். அவர்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு திருச்சபையிலிருக்கும் நபருக்கு அறிவுறுத்துகிறார்.*

*1* ***கொரிந்தியர்*** *6:1-11**இல்,*** *அவிசுவாசிகளுக்கு முன்பாக விசுவாசிகள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டால், அத்திருச்சபையில் இருக்கக்கூடிய மூப்பர்கள் அதை விசாரிக்கும்படிக்கு அழைப்பு விடுக்கிறார். திருச்சபையின் ஒற்றுமைக்காக அவர்கள் தங்கள் தப்பிதங்களை உணரும்படிக்கும் (இயேசுவும் மறுகண்ணத்தை காண்பிக்கச் சொல்லுகிறார்) ஆலோசனைக் கொடுக்கிறார்.*

*பிசாசு பிரிவினை ஏற்படுத்துகிறவன். கிறிஸ்துவோ ஒப்புரவாக்குகிறார். ஆகவே இந்த ஒப்புரவாக்கும் ஊழியத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் அவரோடு கைகோர்க்கிறோம். அதாவது, மக்களின் பிரச்சனைகளுக்கு செவிகொடுத்து, பொதுவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, அந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு போதித்து, அவர்களை தீர்மானத்திற்கு நேராய் வழிநடத்துவதே அந்த ஒப்புரவாக்குதல் ஊழியத்தின் அம்சங்கள்.*

***இ) சமாதானம் பண்ணுகிறவர்கள் பாவத்தை சுட்டிக்காண்பித்து நீதியை போஷிக்கிறவர்கள்.***

***மத்தேயு 7:3-5, நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? 4. இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? 5. மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.***

*உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதை பிடுங்கிப்போடு; உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால் அதை தரித்துப் போடு என்றும் இயேசு சொல்லுகிறார் (மத்தேயு 5:29-30).*

*அதாவது, தனிப்பட்ட பாவத்திலிருந்து வெளிவருவதற்கு தயவு தாட்சண்யமே பார்க்கக்கூடாது. நம்முடைய வாழ்க்கையில் எதிர்படும் தவறான சிந்தனைகளையும் செயல்களையும் நாம் மேற்கொள்ளும்போது, மற்றவர்களை அவர்களின் பாவ வழியிலிருந்து நாம் திசை திருப்பமுடியும்.*

***மத்தேயு 18:15-17, உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். 16. அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. 17. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக.***

*உன் சகோதரன் பாவம் செய்தால், அவனிடத்தில் நாம் நேரடியாய் இடைபடவேண்டும். இந்த முதல் முயற்சியில் பலர் தவறு செய்கிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய பிரச்சனை பாவம் அல்ல, மாறாக, தங்களின் ஞானத்தை பிரதிபலிப்பதே. நாம் மற்றவர்களின் பாவத்தை நம்முடைய ஞானத்தை விளங்கப்பண்ணும் கருவியாய் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது. கிறிஸ்து மேஜைகளைப் புரட்டிப்போட்டு, பாவத்திற்கு விரோதமான சவுக்கைக் கையில் எடுத்தார் (யோவான் 2). அதற்காக சிலுவை பரியந்தம் அவர் சென்றிருக்கிறார். துரதிருஷ்டவசமாய் பலர் இன்று, உறவுகளைப் பிரிப்பது, ஊழியங்கள், வேலைஸ்தலங்கள் போன்ற பாவமில்லாத இடங்களில் இதை செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பிரச்சனை நேரிட்டால், இது பாவமா? இல்லையா? என்ற கேள்வியை ஒருவர் கேட்கவேண்டும். இவ்வாறு கேட்கத் துவங்கினால் பெரும்பாலான பிரச்சனைகள் துவங்குவதற்கு முன்னரே அணைந்துவிடும்.*

*இது கடினமான ஊழியம். ஆனால் சமாதானம் பண்ணுகிறவர்களை தேவன் ஆசீர்வதிப்பதாக சொல்லுகிறார். இஸ்ரவேலர்களை தவறாய் வழிநடத்தின பரிசேயர்கள் மற்றும் ஆவிக்குரிய தலைவர்களின் பாவங்களை இயேசு கடிந்துகொள்ளுகிறார். ஆலயத்தில் உண்மையில்லாமல் செயல்பட்டவர்களை இயேசு கடிந்துகொள்ளுகிறார். கடைசியாக அவர் எல்லா பாவங்களையும் சிலுவையில் கடிந்துகொள்ளுகிறார். அவர் எல்லோருடைய பாவத்தின் தண்டனையையும் ஏற்றுக்கொண்டதால், எல்லோராலும் அவரோடு ஒப்புரவாக முடிகிறது.*

## *5. பிள்ளைகள் அவர்களின் தகப்பனை பிரதிபலிக்கிறார்கள்.*

*"சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்று இயேசு சொல்லும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாவது எப்படி என்று அவர் சொல்ல வரவில்லை. மாறாக, தேவனுடைய புத்திரர்கள் சமாதானம் பண்ணுகிறவர்கள் என்று சொல்லுகிறார்.*

*நியாயத்தீர்ப்பு நாளில் இந்த சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனுடைய புத்திரர்களாய் அங்கீகரிக்கப்பட்டு, பிதாவின் வீட்டிற்கு வரவேற்கப்படுவார்கள்.*

***யோவான் 1:12, அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.***

***கலாத்தியர் 3:26, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.***

*அதாவது, நாம் நம்முடைய மன்னிப்பிற்காகவும் நம்பிக்கைக்காகவும் கிறிஸ்துவை நம்புவதால் நாம் தேவனுடைய புத்திரர்களாய் மாறுகிறோம்.*